**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 171/2019**

**Deposition of P.W.** 11

Name : திரு. ராஜசுந்தர்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:11.03.2026

A2 to A4,A6 Present. A1 and A5 are absent. Petition filed and allowed

முதல் விசாரணை–

நான் தற்போது தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு உட்கோட்ட காவல்துணைகண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் தக்கலை காவல்நிலையத்தில் பணியாற்றிய போது தக்கலை காவல்நிலைய குற்ற எண். 122/2016 பிரிவுகள் 147, 120 பி, 307 உ/இ 116 இ.த.ச வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 09.02.2016ம் தேதி 16.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகளான விஜி, ஜஸ்டின், என்பவர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தேன். பார்வை மகஜர் அ.சா.ஆ.4, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5. பின்னர் பார்வை மகஜர் சாட்சிகளான விஜி, ஜஸ்டின் ராஜ் மற்றும் ஆய்வாளர் திரு ஜெயச்சந்திரன், தினேஷ், நந்து (எ) முருகேசன், வழக்கு பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு. பென்னட்ராஜ் ஆகியவர்களை

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எனக்கு பணிமாறுதல் வந்து விட்டபப்படியால் வழக்குக்கோப்பை பிந்தைய காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

08.02.2016ம் தேதி கொடுத்த புகாரின் படி முதல் தகவல் அறிக்கை பதியவில்லை என்றால் சரிதான். புகாரில் தினேஷ், ஐயப்பன் ஆகியவர்கள் சம்பவத்தை பார்த்ததாக குறிப்பிடவில்லை என்றால் நான் மேற்படி சாட்சிகளை விசாரிக்கவில்லை. 01.09.2015ம் தேதி நடந்ததாக சொல்லும் சம்பவத்திற்கு 6 மாதங்கள் கழித்து புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான் இடைப்பட்ட காலத்தில் யாரும் சம்பவம் நடந்ததாக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. சம்பவம் நடந்ததை காட்ட ஆவணங்கள் எதையும் கைப்பற்றவில்லை. சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் வீடுகள் மற்றும் கடைகள் நிறைந்த பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்தின் அருகில் உள்ள நபர்களை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை. சொன்னது போல் சொன்ன நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், சம்பவ இடம் சென்று பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் காவல் ஆய்வாளர் என்பதால் பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.